பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.
விஜய, ஆனி 32
திருவள்ளுவர் ஆண்டு 2044

030186

கடித எண்.24973/ஏ2/2013-1, நாள் : 16.07.2013

அனுப்புநர்
திரு மு. கண்ணனன், எம்.ஏ.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
திரு பொ. முத்தையன்,
முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர்,
தெற்குத் தெரு,
வடக்குப் பொய்கை நல்லூர் – 611 106.
நாகப்பட்டினம் வட்டம் & மாவட்டம்.

அய்யா,

பொருள் : அரசு உத்தரவுகளில் அரசு அறிவிப்புகளில் தமிழ் தேதி அவசியம் போடுவது குறித்து.

பார்வை : 1. முதலமைச்சரின் தனிப்பிரிவின் கடித எண். 0/29039/NT/2013, நாள் 31.01.2013 வாயிலாக பெறப்பட்ட தங்களின் 07.01.2013, 11.01.2013 மற்றும் 07.06.2013 நாளிட்ட மனுக்கள்.

2. அரசுக் கடித எண். 7565/ஏ2/2013–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 06.03.2013.

*********

பார்வை 1–ல் காணும் தங்களது மனுவில் அரசால் வெளியிடப்படும் அரசு ஆணைகள், தமிழ்நாடு அரசிதழ், அரசு கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் கிறித்துவ ஆண்டுடன் தமிழ் ஆண்டு, திங்கள், நாள், திருவள்ளுவர் ஆண்டை பயன்படுத்தவேண்டும் என அரசு ஆணை (நிலை) எண். 158, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 08.11.2012–ல் வெளியிட்டுள்ள ஆணையினை கடைபிடிக்கவில்லை என்று குறிப்பிட்டு அதன் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளீர்கள். எந்த அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசுப் பணியாளர்கள் கடைபிடிக்கவில்லையோ அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து அவ்வலுவலரின் உயர் அதிகாரிகளுக்கு நேரடியாக உரிய ஆவணங்களுடன் அணுகி புகார் தெரிவிக்கலாம் என்பதனை தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,
மா. கண்ணன் 18/07/2013
அரசு துணைச் செயலாளருக்காக.

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.
ந.க. 030186/அ2/2013, நாள் .11.2013

மேற்காணும் அரசுக் கடிதம் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக.

பெறுநர்
அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்